1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு ஓரளவுக்குக் குறைபாடு இருந்தது. இப்பொழுது ஓரளவு ஆசிரியர்கள் இல்லையென்ற குறைபாடு இல்லை. இப்பொழுது பொதுவாக, பீ.காம்., எம்.காம். ஆகியவைகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு அளித்திருக்கிறது. இவ் வகுப்புகளை நடத்தச் செலவு அதிகமில்லை. ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற செலவுகள் இல்லை. இப்பொழுது பீ.காம்., எம்.காம். படிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், எந்த எந்தக் கல்லூரிகளில் போதுமான இட வசதி இருக்கிறதோ, அக்கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை பல்கலைக் கழகத்திற்குத் தந்திருக்கிறோம். சென்ற 2 ஆண்டுகளாக, எம். காம்., பீ. காம்., வகுப்புகள் நடத்த அனுமதி தருவதிலே பல்கலைக் கழகம் மிகுந்த தாராள மனப்பான்மையோடு நடந்து வருகிறது.

வாணியம்பாடியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

*103 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடித் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி/கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கருகில் விளையாட்டுத் திடல்.

*104 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதிக்கு அருகில் ஒரு நீச்சல் குளமும் (Swimming Pool) டென்னிஸ், வாலிபால், கால்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகளும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?